**கவனிக்க.**-2020.05.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2179 - 2020 ජුනි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.06.04
2179 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 570 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 564 | நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

563-B 82027-405 (2020/ 06)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

### கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2020 /2021

2020.07.01 ஆந் திகதி முதல் 2021.06.30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணத்தை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 வீதம் பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக முடப்பட்ட கடித உறையிலிட்டு அதன் இடது பக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "..................... இலக்கம் கொண்ட ..................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்பட்டு 2020.06.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு சிலாபம் பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சிலாபம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. 2020 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2020, யூன் மாதம் 22 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பாக மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இல. 032- 2223205, 032- 2222138.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | சிலாபம் ந.வட் .இலக்கம் 2 | இச்சம்பிட்டி | 2020.06.22 மு.ப.10.30 | 2,000.00 |
| 2 | சிலாபம் ந.வட் .இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு பொருத்தமான இடம் தேடவேண்டியுள்ளது | 2020.06.22 மு.ப.10.30 | 1,000.00 |
| 3 | பிடிகல கோரலே | ஒலிதலுவ | 2020.06.22 மு.ப.10.30 | 250.00 |

பி. டபிள்யு. எம். எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்.
சிலாபம்.

2020, மே 22.

6-08

## மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவு

*ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை – 2020 யூலை – 2021 யூன்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகைக்கு விற்பனை நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத் தவறணைக்கான 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500.00) பணத்தை ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற முடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2020.06.04 ஆந் திகதி முதல் 2020.06.18 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% இற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்குச் செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

*6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)*

*7. ஏனைய விபரங்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

ந. வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி.

பிரதேச செயலகம்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி,
*2020, மே 21.*

**அட்டவணை**

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| *தவறணை அமைய வேண்டிய இடம்* | *தவறணை இலக்கம்* | *கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|
| | | *திகதி* | *நேரம்* |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | TT No. *1* | *2020.06.19* | *மு.ப. 10.00 மணி* |

***குறிப்பு.-*** *1. கேள்விச் சபை 2020.06.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்குக் கூடும்.*

*2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு கேள்விச் சபை 2020.06.25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.*

*6-10*

---

**புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு**

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2020 – 2021*

***2020.07.01ஆந் திகதி தொடக்கம் 2021.06.30 ஆந் திகதி வரை***

*2020, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட படிவமாக இருக்க வேண்டும். மேலும் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை புத்தளம் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக தயாரிக்கப்பட்டு மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2020.06.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2020.06.18 ஆந் திகதி காலை மு. ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*எச். எம். சஞ்சீவனி ஹேரத்,*
*பிரதேச செயலாளர்,*
*புத்தளம்.*

*பிரதேச செயலகம்,*
*புத்தளம்,*
*2020, மே 26.*

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக் குடியிருப்பு | மு. ப. 11.00 மணி<br>பி. ப. 5.00 மணி | பி. ப. 2.00 மணி<br>இரவு 8.00 மணி | 2020.06.18<br>மு.ப.10.30 | 1,000.00 |

6–28

---

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை – 2020, யூலை முதல் 2021, யூன் வரை*

**எனது இலக்கம்**: ARA/ ADM/ ADMIN/6/7/5
**2020.05.26**

2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்காக 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி கள்ளுத்தவறணை விற்பனைக்காக குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய கேள்விப் பத்திரத்திற்கான பணம் வைப்புச் செய்தமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டும் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தொகையில் 15 % பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் "............. இலக்க ............. கள்ளுத் தவறணைக்கான, கேள்விப்பத்திரங்கள்" கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2020.06.23 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளாருக்கு கிடைக்கும் முகமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2020.06.23 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அப்பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவ.

**அட்டவணை**

| பிரிவு | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| ஆரச்சிக்கட்டுவ | கறுக்குப்பனை | 10 | 2020.06.23 | மு.ப.10.30 | 1,000.00 |
| ஆரச்சிக்கட்டுவ | ஆரச்சிக்கட்டுவ | 11 | 2020.06.23 | மு.ப.10.30 | 1,000.00 |
| ஆரச்சிக்கட்டுவ | பத்துளுஓயா | 12 | 2020.06.23 | மு.ப.10.30 | 1,000.00 |

6-33

---

**திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு**

*கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2020/2021*

*(2020, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2021, யூன் 30 ஆந் திகதி வரை )*

*2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து விலைகோரல் படிவங்களும், குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன், கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக்குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.*

*3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரசாங்கத்திற்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக்கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "4 ஆம் இலக்கமுடைய நிலாவெளி கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2020.06.22 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு குச்சவெளி பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந்நேரத்திற்கு முன் குச்சவெளி பிரதேச செயலாளரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.*

*4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைக் குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

*5. 2020.06.22 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்களும் அல்லது அவர்களின் தரகர்களும் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.*

*7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2020.06.22 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2020.06.29 ஆந் திகதி பி. ப.1.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.*

*8. பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி தவறணை தற்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப்படலாம்.*

*9. இது தொடர்பாக மேலதிக விபரங்களை குச்சவெளி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*பொன்னம்பலம் தனேஸ்வரன்,*
*பிரதேச செயலாளர்,*

*பிரதேச செயலகம்,*
*குச்சவெளி,*
*2020, மே 22.*

**அட்டவணை**

| இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப் படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குச்சவெளி | நிலாவெளி இல. 4 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |

*6-37*

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட மாங்காடு, எருவில் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2020 யூலை - 2021 யூன்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாங்காடு, எருவில் கள்ளுத்தவறணைகளுக்கான 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி நேரம் வரை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு (ரூபா1,500) ரூபா பணத்தை, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற முடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி பி.ப. 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது, கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரம் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்குக் கட்டிய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், இந்தக் குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி) சிவப்பிரியா வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்,
மண்முனை தென் எருவில் பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனை தென் எருவில் பற்று,
களுவாஞ்சிக்குடி,
2020, மே 04.

**அட்டவணை**

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணையின் பெயர் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| மாங்காடு கிராமம் | மாங்காடு | TT No. 4 | 23.06.2020 | மு.ப. 11.30 மணி |
| எருவில் கிராமம் | எருவில் | TT No. 6 | 23.06.2020 | மு.ப. 11.30 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச்சபை 2020.06.23 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2020.06.30 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நடைபெறும்.

6-102

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவ அதிகாரத்தை இரத்துச்செய்தல்

ஹோமாகம, பிடிப்பன வீதி, இல. 82 என்ற இடத்தில் குடியிருக்கும் பத்ர உக்வத்த மாயாதுன்ன என்று அழைக்கப்படும் உக்வத்த கங்கானம்கே பத்ரா மாயாதுன்னே (தே. அ. அ. 645021665V) ஆகிய நான், 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி கொழும்பிலுள்ள பிரசித்த நொத்தாரிசு ஆனந்த குலவன்ச என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்டதும், கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் தினப்பதிவேட்டு இல. 162, போலியோ இல. 41, வொல்யும் இல. 3827 இன்கீழ் 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவப்பத்திர இல. 1075 மூலம் ஹோமாகம, பிடிப்பன வீதி, இல. 82 என்ற இடத்தில் குடியிருக்கும் திஸ்ஸ ரஞ்சித் மாயாதுன்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி அமுலாகும் வகையில் உடனடியாக இரத்துச்செய்கிறேன். மேற்படி நபரினால் அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் இதன் பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பு கூற மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

பத்ர உக்வத்த மாயாதுன்ன என்று அழைக்கப்படும்
உக்வத்த கங்கானம்கே பத்ரா மாயாதுன்ன.

6-13

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தாலி, பொலோன்யா, தெரச், பயதியத், சணோ, காசல், 40024, இலக்கம் 18, மொடியோலி, இலக்கம் வியா 9 என்ற இடத்தில் வசிக்கும் (இத்தாலி கடவுச்சீட்டு இலக்கம் YA 2868620) றொணல்ட் போல் பர்தலொட் (தற்போது வதிவு முகவரி- 146, வெச்ட்கோட்ச் ட்ரய்வ், லீசெச்டர், LE 30SP ஐக்கிய இராச்சியம்), (இலங்கை வதிவு முகவரி-353/1, பாடசாலை சந்தி, தளங்கம, ராஜகிரிய) மற்றும் தே. அ. அ. இல. 571820137X) ஆகிய நான், அரசு தூதர் ஆக இலங்கை வெளிநாட்டுத் தூ தரகம். இல. ரோம் இனால் 2014 ஆனி மாதம் 11 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதன் மூலம் எனது அற்றோணித் தத்துவகாரராக கோட்டை, மாதிவெல ஒபேகேண சாலை, இலக்கம் 44/2 எனும் முகவரியில் வசிக்கும் எலிசபெத் ஜசபின் மென்டிச் மற்றும் நீ பர்தலொட் (தே. அ. அ. இல. 595761786V) என்பவரை நியமித்திருந்த அற்றோணித் தத்துவத்தை 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2020.03.17 ஆந் திகதி முதற்கொண்டு சட்ட ரீதியாக இரத்துச் செய்வதாக இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளும் வகையில் அறிவிக்கின்றேன்.

06-21

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தாலி, பொலோன்யா, தெரச், பயதியத், சணோ, காசல், 40024, இலக்கம் 18, மொடியோலி, இலக்கம் வியா 9 என்ற இடத்தில் வசிக்கும் (இத்தாலி கடவுச்சீட்டு இலக்கம் YA 2868620) றொணல்ட் போல் பர்தலொட் (தற்போது வதிவு முகவரி- 146, வெச்ட்கோட்ச் ட்ரய், லீசெச்டர், LE 30SP ஐக்கிய இராச்சியம்), (இலங்கை வதிவு முகவரி-353/1, பாடசாலை சந்தி, தளங்கம, ராஜகிரிய) மற்றும் தே. அ. அ. இல. 571820137X) ஆகிய நான், நொத்தாரிசு N. H. K. G. பர்சி த சில்வாவினால் 2006 ஆண்டு ஆவணி மாதம் 03 ஆந் திகதி எழுதி 3107 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது அற்றோணித் தத்துவகாரராக கோட்டை, மாதிவெல ஒபேகேண சாலை, இலக்கம் 44/2 எனும் முகவரியில் வசிக்கும் எலிசபெத் ஜசபின் மென்டிச் மற்றும் நீ பர்தலொட் (தே. அ. அ. இல. 595761786V) என்பவரை நியமித்திருந்த அற்றோணித் தத்துவத்தை 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2020.03.17 ஆந் திகதி முதற்கொண்டு சட்ட ரீதியாக இரத்துச் செய்வதாக இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளும் வகையில் அறிவிக்கின்றேன்.

06-22

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

*11.* ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*12.* ***ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

*13.* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2020***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வியாழன் | 04.06.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2020 |
| | | வெள்ளி | 12.06.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2020 |
| | | வெள்ளி | 19.06.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.06.2020 |
| | | வெள்ளி | 26.06.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2020 |
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2020 |
| | | வெள்ளி | 10.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2020 |
| | | வெள்ளி | 17.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2020 |
| | | வெள்ளி | 24.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2020 |
| | | வெள்ளி | 31.07.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2020 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2020 |
| | | வெள்ளி | 14.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2020 |
| | | வெள்ளி | 21.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2020 |
| | | வெள்ளி | 28.08.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2020 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*